செய்திருக்கிறார்கள். ஆங்கிலத்திற்கு முதலிடம் இல்லாமல் தமிழுக்கு முதலிடம் கொடுத்து தமிழைச் சிறிய எழுத்தில் போடாமல் ஆங்கிலத்தைப்போல் பெரிய எழுத்திலே போட்டு அந்த அகர வரிசையை மாற்றுவற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை நியாயமானதும் சிந்திக்க வேண்டியதும் தான். தமிழுக்கு முதலிடமும் ஆங்கிலத்திற்கு பின்னாலேயும் இடம் கொடுக்கிற முறை இனிமேல் கடைபிடிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அகர வரிசை ஆங்கிலத்தில் தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் அகர வரிசையை கடைபிடிப்பார்கள்.

[முற்பகல் 10–10]

(ஆ) உறுப்பினர் இருக்கையில் ஆணி இருந்தது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நான் நேற்றைய தினம் அவைக்கு வரும்பொழுது என்னுடைய இருக்கையிலே மூன்று இஞ்ச் நீளமுள்ள ஆணி இருந்தது. அது சாதாரணமாக ஏற்பட்டது என்று நினைத்து அதைத் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வராமல் வெளியிலே தூக்கியெறிந்துவிட்டேன். ஆனால், இன்றைக்குப் பார்க்கும்பொழுதும் கூர்மையான ஆணியும், பென்சிலும் என்னுடைய இருக்கையில் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாகத் தாருங்கள். அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, அது அரசாங்கத்தின் சொத்து என்ற காரணமாக, அதை நீங்கள் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இ) கட்டிடத் தொழிலாளர்கள், கைது செய்யப்பெற்றது குறித்து.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள், அவர்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்துகின்ற முறையிலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் ஊர்வலம் வந்தவர்கள் கிட்டத்தட்ட 500 பேர்களுக்கு மேல் கைதாகி உள்ளே இருக்கிறார்கள். அது சம்பந்தமாக.........